[25th March 1969

(10) காச நோயாளிகளாக உள்ள முன்னாள் போர் வீரர் ஒவ்வொருவரும் இலவச நோயாளிகளாக அனுமதிக்கப்படுகிற வரையில் காச நோய் நலம் பேண மருத்துவ மனைகளில் உடனடியாக அனுமதித்துக் கொள்ளப்படும் பொருட்டு, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150 மானியம் வழங்குதல்.

(11) முன்னாள் போர் வீரர்களும், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும், ஆசிரியர் பயிற்சி, குறுகிய கால ஆசிரியர் பயிற்சி, பண்டிதர்கள் பயிற்சி, உடற்பயிற்சி ஆசிரியர் பயிற்சி அவற்றைப் பெறுவதற்கென அவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவிப் பணம்.

முன்னாள் போர் வீரர்களது குழந்தைகளும், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும், சட்டப் படிப்பு படித்து வருவார்களாயின் அவர்களுக்கு 1968–69 கல்வி ஆண்டு முதல் கல்விக் கட்டணத்தையும் சிறப்புச் சம்பளத்தையும் அனுமதிக்கவும் கொள்கையளவில் நிதித் துணைக் குழு ஒப்புக் கொண்டுள்ளது. முன்னாள் போர் வீரர்களின் குழந்தைகளும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும், கல்லூரிப் புகுமுக வகுப்பு, பி.எ., பி.எஸ்.ஸி. முதலிய படிப்புகளை படித்து வந்தால் ஓராண்டுக்கு கல்விக் கட்டணத்தையும் சிறப்புச் சம்பளத்தையும் அனுமதித்து ஆண்டு இறுதியில் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கவும், அது முடிவு செய்தது. மேலும், முன்னாள் போர் வீரர்களைச் சார்ந்துள்ளவர்கள் சிறப்பு நிதியிலிருந்து படிப்பு உதவித் தொகைகளைப் பெறும் நேர்வுகளில் அவர்கள் ஏற்பளிக்கப்பட்ட விடுதிகளில் உண்மையில் தங்கியிருந்தால், புத்தகப் படியும் உணவுப் படியும் அவர்களுக்கு வழங்கத் தக்கதாகும் என்று அக்குழு முடிவு செய்தது. இந்த முடிவுகள், மாநில நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

2. வேலை ாய்ப்பு உத்வி:—வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் அரசாங்கப் பதவிகளுக்கு ஆட்கள் தெரிந்தெடுக்கப்படுவது குறித்து, அரசாங்கம், போர்ப் பணியில் ஈடுபட்டவர்களுக்கும், முன்னாள் போர் வீரர்களுக்கும் உயர்ந்த முறை வைப்புகளை முடிவு செய்துள்ளது. அவர்கள் அரசாங்கத்தில் பணியில் சேர்வதற்கென அவர்களது வயது வரம்பு 40 ஆகத் தளர்த்தப்பட்டுள்ளது. முன்னாள் போர் வீரர்களைப் பொறுத்த வரையில் எந்த ஒரு பதவிக்காகவேனும் பிற வகையில் நியமிக்கப்பட அவர்கள் தகுதி கொண்டிருப்பின், விதிகளில் முடிவு செய்யப்பட்டுள்ள கல்வித் தகுதிகளும் தளர்த்தப்படலாம்.

3. நில ஒப்படை:—புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வதைப் பொறுத்த வரையில் போர்களில் வீரமரணம் எய்திய போர் வீரர்களின் குடும்பங்கள் அல்லது போர்களில் காயமடைந்து ஊனமடைந்துள்ள போர் வீரர்களின் குடும்பங்கள் இவற்றிற்கு முதலிடம் வழங்கப்படுகிறது. போர் வீரர்களுக்கும் முன்னாள் போர் வீரர்களுக்கும் இரண்டாவது மூன்றாவது இடம் அளிக்கப்படுகிறது. குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 5 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது $2\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலம் ஒப்படை செய்யப்படுகிறது.

Appendix II

[*Vide* answer to Starred Question No. 196 on page 10.]

(அ) தமிழ்நாடு 1957–ம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளைச் சேர்ந்த 53 (1) விதியின் கீழ், திரைப்பட மாளிகைக்கு வரும் கார்களை நிறுத்தி வைக்கும் பொருட்டு 6·10 மீட்டர் (20 அடி) அகலத்துக்குக் குறையாத திறந்த வெளியிடம் அதன் மூன்று பக்கங்களிலாவது இருக்க வேண்டும் அல்லது உரிமம் வழங்கும் அதிகாரி இருக்க வேண்டும் என்று கேட்கிற இன்னும் அதிக அளவு அகலத்திற்கு திறந்தவெளி இருக்க வேண்டும். ஒவ்வொரு திரைப்பட மாளிகைக்கும் வரும் கார்களின் எண்ணிக்கை மாளிகைக்கு மாளிகை வேறுபடுகிறது.

25th March 1969]

(இ) சென்னை மாநகரில் இப்போது 56 திரைப்பட மாளிகைகள் உள்ளன. அவற்றில் 37 திரைப்பட மாளிகைகளில் கார்களை நிறுத்தும் வசதிக்காக திறந்த வெளியிடம் உள்ளது. விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

1	பிரபாத்	20	மேகலா
2	காமதேனு	21	புவனேஸ்வரி
3	நூர்ஜஹான்	22	வீனஸ்
4	லிபர்ட்டி	23	மகாராஜா
5	ஈராஸ்	24	சீனிவாசா
6	ஜெயராஜ்	25	கிருஷ்ணவேணி
7	பிரீவியூ பாரடைஸ்	26	நடராசா
8	ப்ளாசா	27	சபையர்
9	நியூ குளோப்	28	ப்ளூ டயமண்டு
10	வெலிங்டன்	29	அகஸ்தியா
11	கெயிட்டி	30	நாஷனல்
12	சித்ரா	31	ஸ்ரீ பத்மநாபா
13	பாலர் அரங்கம்	32	மகாராணி
14	காசினோ	33	பாரத்
15	அசோக்	34	ராம்
16	தங்கம்	35	சன்
17	சயானி	36	எமரால்டு
18	உமா	37	சரவண
19	லட்சுமி		

(உ) கீழ்க்கண்ட 19 திரைப்பட மாளிகைகளில் இந்த நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை :—

1	பாரகன்	11	ஸ்ரீ கிருஷ்ண
2	ஓடியன்	12	கிரவுன்
3	ஸ்டார்	13	மினர்வா
4	நியூ எல்பின்ஸ்டன்	14	சரஸ்வதி
5	மிட்லாண்டு	15	சாந்தி
6	ராக்ஸி	16	மகாலட்சுமி
7	பிராட்வே	17	ஆனந்த்
8	செலக்ட்	18	ராஜகுமாரி
9	ஸ்ரீ முருகன்	19	கபாலி
10	பிரைட்டன்		

(எ) தமிழ்நாடு 1957-ம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளின் 53 (1) விதி பொருந்துவதிலிருந்து 16 திரைப்பட மாளிகைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 3 திரைப்பட மாளிகைகளாகிய பிரைட்டன், ராக்சி, மகால்ட்சுமி ஆகியவற்றிற்கு மேற்சொன்ன விலக்கு அளிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS